### அமீனா சாதிக், சைபூதீன் நிகழ்ச்சி ஏற்பாட்டில்

# நெல்லை மத்திய மாவட்ட தி.மு.க. சார்பில் பொதுக்கூட்டம்!

## டி.பி.எம்.மைதீன்கான் தலைமை! அமைச்சர் கோவி.செழியன் சிறப்புரை!

நெல்லை, டிச. 19 -
நெல்லை மத்திய மாவட்ட தி.மு.க சார்பில் முத்தமிழ் அறிஞர் கலைஞர் அவர்களின் நூற்றாண்டு நிறைவு விழா,கழக பவள விழா மற்றும் கழக இளைஞர் அணி செயலாளர், துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்களின் 48 வது பிறந்த நாள் விழா ஆகிய முப்பெரும் விழா பகுதி கழக செயலாளர் மாமன்ற உறுப்பினர் ஆமீனா சாதிக்,தொ.மு.ச மாவட்டச் செயலாளர் சைபுதீன் ஆகியோர் ஏற்பாட்டில் மேலப்பாளையம் பஜார் திடலில் நெல்லை மத்திய மாவட்ட பொறுப்பாளர் டி.பி.எம்.மைதீன்கான் தலைமையில் நடைபெற்றது.

இந்நிகழ்வில் உயர் கல்வித் துறை அமைச்சர் முனைவர். கோவி செழியன் பங்கேற்று நலத்திட்ட உதவிகளை வழங்கி சிறப்புரை யாற்றினார்.

நெல்லை மத்திய மாவட்ட தி.மு.க சார்பில் மேலப்பாளையம் பஜார் திடலில் முத்தமிழ் அறிஞர் கலைஞர் அவர்களின் நூற்றாண்டு நிறைவு விழா,கழக பவள விழா,கழக இளைஞர் அணி செயலாளர், துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்களின் 48 பிறந்தநாள் விழா ஆகிய முப்பெரும் விழா நெல்லை மத்திய மாவட்ட பொறுப்பாளர் டி.பி.எம்.மைதீன்கான் தலைமையில் சிறுபான்மையினர் நல உரிமைப் பிரிவு தலைவர் முகமதுஅலி, மாநகர துணை செயலாளர் அப்துல் கையூம், மேலப்பாளையம் பகுதி செயலாளர் துபாய் சாகுல், சாகுல் ஹமீது, மாவட்டப் பிரதிநிதி இஸ்மாயில், அபுபக்கர் நாகூர் பிச்சை, மஸ்தான், சுடலைக்கண்ணு, மூன் முகமது, நசீர், செய்யது மைதீன்,மைனா கரீம் செய்யது மூஸா,சித்தர் நாகூர், நவநீதன், முகமது மைதீன், உமா மகேஸ்வரன், பிச்சையா எட்வர்ட் ஜான், கந்தன்,பீர்மஸ்தான்,ஜான் ஏசுபாதம், சாமுவேல் ஆகியோர் முன்னிலையில் நடைபெற்றது. மாவட்ட மாணவரணி துணை அமைப்பாளர் ரம்ஜான் அலி வரவேற் புரையாற்றினார்.

இந்நிகழ்வில் உயர் கல்வித்துறை அமைச்சர் முனைவர்.கோவி.செழியன் பேசியதாவது.

சமூக நீதி கண்ட தலைவர் முத்தமிழ் அறிஞர் கலைஞர் அவர்கள். அவர்களின் வழி வந்தவர் கழகத் தலைவர் முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்கள்.அவர் முதல்வராக வரமுடியாது கட்டம் சரியில்லை ராசி சரியில்லை என புறம்பேசிய தமிழகத்தில் முதல்வராக மு.க.ஸ்டாலின் அவர்கள் பொறுப்பேற்றார்.அதன் பின்பு நடந்து முடிந்த அனைத்து தேர்தலிலும் வெற்றியை பெற்று இந்தியாவிற்கு அரசியல் கற்றுகொடுத்த திராவிட மாடல் தலைவராக முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் திகழ்கிறார். சிறுபான்மை மக்களுக்கு இஸ்லாமிய மக்களுக்கும் எந்த பாதிப்பும் இல்லாமல் முதலமைச்சர் அவர்களும்,தி.மு.க.வும் அரணாக இருக்கும்.

**மோடி வித்தை தமிழகத்தில் எடுபடாது.**

பேரறிஞர் அண்ணா, தந்தை பெரியார்,தமிழின தலைவர் கலைஞர் அவர்கள், பேராசிரியர் பெருந்தகையார் என அனைத்து தலைவர்களுக்கு நூற்றாண்டு விழா கொண்டாடிய இயக்கமாக தி.மு.க. உள்ளது.நூற் றாண்டு எனும் சொல்லை பயன்படுத்தும் தகுதி தி.மு.க.வை தவிர வேறு எந்த கட்சிக்கும் கிடையாது. தி.மு.க.வை எந்த கொம்பனாலும் தொட்டு பார்க்கமுடியாது.அரசியல் என்பது சினமா படமல்ல ஒரு வாரம் ஓடி விட்டு போவதற்கு. தி.மு.க. என்பது எஃகு கோட்டை.இது பெரியார் பூமி மதசார்பற்ற பூமி என்பதை நடந்துமுடிந்த நாடாளுமன்ற தேர்தலில் தமிழகம் காட்டியது. மோடியை எதிர்க்கும் வல்லமை தென்னகத்தின் ஒரே தலைவரான மக்கள் தலைவர்,திராவிட மாடல் நாயகன் முதல மைச்சர் முத்துவேல் கருணாநிதி ஸ்டா லினுக்கு மட்டுமே உள்ளது.வேறு எந்த தலைவருக்கும் இல்லை.பேசி பேசி வளர்ந்த கட்சி தி.மு.க. அதனை வீழ்த்த வேறு கட்சி கிடையாது.

தி.மு.க.விற்கு என பெரும் யுத்த வரலாறு உள்ளது.அது நேற்று பெய்த மழையில் முழைத்த காளான்கள், சினிமா நடிகர்களுக்கு,ஜாதிய கட்சி தலைவர்களுக்கும் அந்த வரலாறு தெரியாது.முத்தமிழ் அறிஞர் கலைஞரின் அவர்களின் பேரன் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் ஆரியத்தின் மீது சம்மட்டி அடிக்க புறப்பட்டுள்ளார்.அமைச்சராக இருக்கும் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் காரில் எதிர்கட்சி தலைவர் எடப்பாடி பழனிச்சாமி மாறுதலாக ஏறி செல்ல முயன்றார்.அதனை சட்டமன்றத்தில் கலைஞரின் பேரனாக நக்கல் நையாண்டியுடன் பேசியபோது எடப்பாடி அவர்களே தாராளமாக எனது காரில் ஏறி செல்லுங்கள்.கமலாலயம் மட்டும் சென்றுவிடாதீர்கள் என்றார். ஏன்என்றால் அ.தி.மு.க.எதிர்கட்சி வரிசையில் இருந்தாலும் திராவிட வழியில் செல்லவேண்டும் என்ற அர்த்தத்திலேயே துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் சொன்னார்கள்.

தி.மு.க.கூட்டணி 40க்கு 40 என தமிழகத்தில் 100 க்கு 100 வெற்றியை பெற்றது. வேறு எந்த மாநிலத்திலும் இல்லாத வரலாற்றை படைத்தது தமிழகத்தில் தான் என்பதை முதலமைச்சர் அவர்கள் நன்றி அறிவிப்பு கூட்டத்தில் உரக்க சொன்னார். வரும் தேர்தலில் 200 பிளஸ் என முதல்வர் சொல்லி உள்ளார்கள்.ஆனால் சிறுபான்மை மக்கள்,பொதுமக்கள் ஆதரவுடன் 234 க்கு 234 தொகுதிகளையும் வெற்றி பெறுவோம்.தமிழகத்தில் எதிர்கட்சியே இல்லாத நிலையை உருவாக்குவோம். பிற்படுத்தபட்ட,சிறுபான்மையின தாழ்த்தபட்ட மக்களுக்கான பாதுகாவலராக முதலமைச்சர் அவர்கள் இருந்துவருகிறார்.தி.மு.க.வின் சொற்பொழிவாளராக இருந்த என்னை 3 முறை திருவிடைமருதூர் சட்டமன்ற தொகுதியில் நிறுத்தி வெற்றி பெற செய்து அமைசாராக்கி முதல்வர் அவர்கள் அழகுபார்த்தவர். அம்பேத்கர் நூற்றாண்டு விழாவை வி.பி.சிங் கொண்டாடிய போது அனைத்து மாநில முதல்வர்களிடமும் ஆலோசனை கேட்கபட்டது. அம்பேத்கர் நூற்றாண்டு விழாவின் போது காந்தி,நேரு போன்றோருக்கு ஒரு ரூபாய் நாணயம் வெளியிட்டதை போன்று அம்பேத்கர் உருவம் பொறித்த நாணையத்தை வெளியிடவேண்டும் என கலைஞர் அவர்கள் ஆலோசனை வழங்கினார்கள்.அதனை ஏற்று அம்பேத்கர் படம் பொறித்த நாணயம் வெளியிடப் பட்டது. அம்பேத்கருக்கு உரிய மரியாதை தி.மு.க.மேடைகளில் இல்லை என ஆதவ் அர்ஜூன் போன்றோர் வரலாறு தெரியாமல் சொல்கிறார்கள்.திருத்தணி,பழனி, திருப்பதி போன்ற கோவில்களின் உண்டியல்களில் அம்பேத்கர் உருவம் படைத்த நாணயங்கள் விழுந்து வருகிறது. தொட்டால் தீட்டு என்று சொல்பவர்களே அம்பேத்கர் உருவம் பொறித்த நாணயத்தை உண்டியலில் இருந்து கையால் எடுக்கும் நிலையை உருவாக்கிய புரட்சியாளர் கலைஞர் அவர்கள்.நம் நாட்டின் பண்பாடு திராவிடத்தை கட்டி காக்க தற்போது கழகத் தலைவர் முதலமைச்சர் முத்துவேல் கருணாநிதி ஸ்டாலின் அவர்களும், அடுத்ததாக கழக இளைஞர் அணி செயலாளர் துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் இருக்கிறார்கள்.

இவ்வாறு அமைச்சர் முனைவர். கோவி செழியன் பேசினார். அதனைத் தொடர்ந்து அமைச்சர் முனைவர்.கோவி செழியன் பயனாளிகளுக்கு நலத்திட்ட உதவிகளை வழங்கினார்.

முன்னதாக கூட்டத்தில் பாளை சட்டமன்ற உறுப்பினர் மு.அப்துல்வகாப்,மாநில வர்த்தக அணி இணை செயலாளர் மாலைராஜா,கிறிஸ்தவ தேவாலய உபதேசியார்கள் மற்றும் பணியாளர்கள் நலவாரிய தலைவர் விஜிலா சத்தியானந்த் ஆகியோர் உரையாற்றினர்.

நிகழ்வில் தலைமை செயற்குழு உறுப்பினர்கள் பேச்சிப்பாண்டியன், அமீரக திமுக அமைப்பாளர் மீரான் மாவட்ட அவை தலைவர் முருகன் துணை செயலாளர்கள் சுரேஷ், தர்மன்,கிரிஜா குமார்,துணை மேயர் ராஜ்,பொதுக்குழு உறுப்பினர்கள் சரவணன்,பரமசிவ ஐயப்பன், துணை மேயர் ராஜ்,முன்னாள் மாவட்ட துணை செயலாளர் ஆ.க. மணி,முன்னாள் பொருளாளர் அருண்குமார்,மத்திய மாவட்ட இளைஞரணி துணை அமைப்பாளர் மீரான் மைதீன்,மாமன்ற உறுப்பினர் டாக்டர் சங்கர்,சாலி மௌலானா, பெரோஸ் கான், ஜபருல்லாகான், காந்தி,சிவன்பாண்டியன், வானுமா மலை,பாரிசா குல்,ஜஹாங்கீர்,கரீம், ரசூல், இஸ்மாயில்,கழக பேச்சாளர்கள் நெல்லை முத்தையா, ராவணன்,நெல்லை ரவி உள்பட கழகத்தினர்,பொதுமக்கள் திரளாக கலந்து கொண்டனர்.

நிகழ்ச்சி நிறைவில் 44 வது வட்ட கழக செயலாளர் முறுக்கு சாகுல் ஹமீது நன்றியுரையாற்றினார்.



தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் உத்தரவின் பேரில், தமிழ்நாடு துணை முதல்வர் அவர்களின் ஆலோசனையின்படி நகராட்சிகளின் மண்டல செயற் பொறியாளர் .கருப்பையா ராஜா கம்பம் நகர் மன்ற தலைவர் வனிதா நெப்போலியன் ஆகியோர் முன்னிலையில். கம்பம் நகராட்சி பகுதியில் நடைபெற்று வரும் மேம்பாட்டு பணிகளான பேருந்து நிலைய மேம்பாட்டு பணிகள், புதிய ஆம்னி பேருந்து நிலைய கட்டுமானப் பணிகள், புதிய வணிக வளாக கட்டிடப் பணிகள் (கம்பம் உழவர் சந்தை அருகில்), உர செயலாக்க மைய (ஆங்கூர்பாளையம் ரோட்டில்) கட்டிடப் பணிகளை நேரில் ஆய்வு செய்தனர் ஆய்வின் போது நகராட்சி ஆணையாளர் (பொறுப்பு) செல்வி. பார்கவி, நகராட்சி பொறியாளர்கள் ஐயனார், சந்தோஷ் குமார் மற்றும் நகராட்சி ஒப்பந்ததாரர்கள் உடன் இருந்தனர்.

## தி.மு.க. பொறியாளர் அணி நிர்வாகிகள் நியமனம்!

### தலைமைக் கழக அறிவிப்பு!

தி.மு.க. சட்ட திட்டம் விதி 18, 19 பிரிவுகளின்படி, ஏற்கனவே நியமிக்கப்பட்ட தி.மு.க. பொறியாளர் அணி நிர்வாகிகள் பட்டியல் பின்வருமாறு மாற்றி அமைத்து அறிவிக்கப்படுகிறது.

**தி.மு.க. பொறியாளர் அணி**

**பொறியாளர் அணித் தலைவர் –**
**துரை.கி.சரவணன், பி.இ., எம்.பி.ஏ.,**

**பொறியாளர் அணிச் செயலாளர் –**
**கு. கருணாநிதி, பி.இ., எம்.பி.ஏ.,**

**பொறியாளர் அணி இணைச் செயலாளர் –**
**அ. வெற்றிஅழகன், பி.இ., எம்.பி.ஏ., எம்.எல்.ஏ.,**

**பொறியாளர் அணி துணைச் செயலாளர்கள் –**

கு. சண்முகசுந்தரம், பி.இ., எம்.பி.ஏ., எம்.பி
வே. உமாகாந்த், பி.இ., எம்.பி.ஏ.,
இரா. நரேந்திரன், பி.இ.எம்.எஸ்.
சி.பிரதீப், பி.ஈ., எம்.பி.ஏ., (பிஎச்.டி)
இரா. ப. பரமேசுகுமார், பி.இ.,
ஆர்.வி.எல்.ரவிச்சந்திரன், டிசி இ., திருவாரூர்
கலை. கார்த்திகேயன், பி.இ., மதுரை-17.
அம்பாள். நந்தகுமார், அன்னூர்.
வெற்றி. ஞானசேகரன், டிசிஇ., ஒசூர் - 9.
பி. அன்பழகன், டிசிஇ., தூத்துக்குடி - 2.
எம்.பி.ராஜவர்மன், எம்.டெக்., எம்.எஸ்., பி.எச்டி., நெல்லை.

**"அண்ணா அறிவாலயம்"**
சென்னை - 600018
நாள்- 17.12.2024

**துரைமுருகன்**
பொதுச் செயலாளர்,
தி.மு.க.

## தி.மு.க. 15ஆவது பொதுத்தேர்தல்

## விருதுநகர் தெற்கு மாவட்டம், அருப்புக்கோட்டை தெற்கு ஒன்றியம், மாவட்ட பிரதிநிதி பொறுப்புக்கான தேர்தல்

## தேர்தல் முடிவு!

### தலைமைக் கழக அறிவிப்பு!

“திராவிட முன்னேற்றக் கழகத்தின் 15வது பொதுத் தேர்தலில், விருதுநகர் தெற்கு மாவட்டம், அருப்புக்கோட்டை தெற்கு ஒன்றியத்தின் மாவட்ட பிரதிநிதியாக தேர்ந்தெடுக்கப்பட்ட ரா.அப்பணசாமி அவர்கள் மறைவெய்திய காரணத்தால்; விருதுநகர் தெற்கு மாவட்டம், அருப்புக்கோட்டை தெற்கு ஒன்றியம் மாவட்ட பிரதிநிதி பொறுப்புக்கான தேர்தல் நடைபெற உள்ளதையொட்டி, இப்பொறுப்புக்கு போட்டியிடுவோர் அதற்கென உள்ள படிவத்தில் முறைப்படி பூர்த்தி செய்து 2024, நவம்பர் 28 (வியாழக் கிழமை) அன்று ரூ.1000/-வீதம் தலைமைக் கழகத்தில் அளித்து இரசீது பெற்றுக் கொள்ள வேண்டும். என தலைமைக் கழகத்தின் சார்பில் அறிவிக்கப்பட்டதையொட்டி;

விருதுநகர் தெற்கு மாவட்டம், அருப்புக்கோட்டை தெற்கு ஒன்றியம், மாவட்ட பிரதிநிதி பொறுப்புக்கு ம.முத்துஆதியான் அவர்கள் மட்டுமே வேட்புமனு தாக்கல் செய்திருந்த காரணத்தால், அவரது மனு ஏற்கப்பட்டு,

**விருதுநகர் தெற்கு மாவட்டம், அருப்புக்கோட்டை தெற்கு ஒன்றியம், மாவட்ட பிரதிநிதியாக**

**திரு. ம.முத்துஆதியான்,** எண். 2/185, மேற்குத் தெரு, ஆமணக்குநத்தம் & அஞ்சல் - 626 112, விருதுநகர் மாவட்டம். **அவர்கள் தேர்ந்தெடுக்கப்பட்டதாக அறிவிக்கப்படுகிறது.**

**"அண்ணா அறிவாலயம்"**
சென்னை - 600018
நாள்- 17.12.2024

**துரைமுருகன்**
பொதுச் செயலாளர்,
தி.மு.க.

## ஒழுங்கு நடவடிக்கை ரத்து!

### தலைமைக் கழக அறிவிப்பு!

சென்னை தெற்கு மாவட்டம், தாமஸ்மலை தெற்கு ஒன்றியம், மேடவாக்கம் ஊராட்சியைச் சேர்ந்த எம்.பி.மூர்த்தி அவர்கள் தனது செயலுக்கு வருத்தம் தெரிவித்து மீண்டும் கழகப் பணியாற்றிட அனுமதி அளிக்குமாறு, **கழகத் தலைவர்** அவர்களிடம் வைத்த கோரிக்கையினை ஏற்று, அவர் மீதான ஒழுங்கு நடவடிக்கை ரத்து செய்யப்பட்டு, இன்று முதல் கழக உறுப்பினராகச் செயல்பட அனுமதிக்கப்பட்டுள்ளார்.

**"அண்ணா அறிவாலயம்"**
சென்னை - 600 018
நாள்- 17.12.2024

**துரைமுருகன்**
பொதுச் செயலாளர்,
தி.மு.க.

## தி.மு.க. 15ஆவது பொதுத்தேர்தல்

## வேலூர் மாவட்டம்

## மாவட்ட துணைச் செயலாளர் - பொதுக்குழு உறுப்பினர் ஆகிய பொறுப்புகளுக்கான தேர்தல்

## தேர்தல் முடிவு!

### தலைமைக் கழக அறிவிப்பு!

“திராவிட முன்னேற்றக் கழகத்தின் 15வது பொதுத் தேர்தலில், வேலூர் மாவட்ட துணைச் செயலாளராக (ஆதிதிராவிடர்) தேர்ந்தெடுக்கப்பட்ட எஸ்.பாண்டியன் அவர்கள் வசித்து வரும் அகரம் ஊராட்சி, அணைக்கட்டு தெற்கு ஒன்றியம் பிரிக்கப்பட்டபோது திருப்பத்தூர் மாவட்டத்தில் சேர்க்கப்பட்டதாலும், அதைப்போலவே பொதுக்குழு உறுப்பினராக தேர்ந்தெடுக்கப்பட்ட திருமதி ஷர்மிளா ஜெயப்பிரகாஷ் அவர்கள் வசித்து வரும் சின்னசேரி ஊராட்சி குடியாத்தம் வடகிழக்கு ஒன்றியம் பிரிக்கப்பட்டபோது திருப்பத்தூர் மாவட்டத்தில் சேர்க்கப்பட்டதாலும், இவர்கள் வகித்து வந்த தத்தமது பொறுப்பிலிருந்து விடுவிக்கப்பட்டு, அப்பொறுப்புகள் நிரப்பப்பட வேண்டியிருப்பதால், வேலூர் மாவட்டம், **மாவட்ட துணைச் செயலாளர் (ஆதிதிராவிடர்), பொதுக்குழு உறுப்பினர்** ஆகிய பொறுப்புகளுக்கான தேர்தல் நடைபெற உள்ளதையொட்டி, இப்பொறுப்புக்கு போட்டியிடுவோர் அதற்கென உள்ள படிவத்தில் முறைப்படி பூர்த்தி செய்து 2024, **நவம்பர் 30 (சனிக்கிழமை) அன்று ரூ.25000/-வீதம் தலைமைக் கழகத்தில் அளித்து இரசீது பெற்றுக் கொள்ள வேண்டும்.”** என தலைமைக் கழகத்தின் சார்பில் அறிவிக்கப்பட்டதையொட்டி;

வேலூர் மாவட்ட துணைச் செயலாளராக (ஆதிதிராவிடர்) பொறுப்புக்கு முனைவர் எம்.பிரபாத்குமார் மற்றும் பொதுக்குழு உறுப்பினர் பொறுப்புக்கு திருமதி த.புவியரசி ஆகியோர் மட்டுமே வேட்புமனு தாக்கல் செய்திருந்த காரணத்தால், அவர்களது மனு ஏற்கப்பட்டு,

**வேலூர் மாவட்ட துணைச் செயலாளராக (ஆதிதிராவிடர்)** முனைவர் **எம்.பிரபாத்குமார்,** 12/34, ராமன் வீதி, பேர்ணாம்பட்டு, வேலூர் மாவட்டம் அவர்களும்;

**வேலூர் மாவட்டம், பொதுக்குழு உறுப்பினராக திருமதி த. புவியரசி,** 145. ராஜகணபதி நகர், புதிய பேருந்துநிலையம் எதிரில், குடியாத்தம் வேலூர் மாவட்டம் அவர்களும் தேர்ந்தெடுக்கப்பட்டதாக அறிவிக்கப்படுகிறது.

**"அண்ணா அறிவாலயம்"**
சென்னை - 18
நாள்- 17.12.2024

**துரைமுருகன்**
பொதுச் செயலாளர்,
தி.மு.க.

## திண்டுக்கல் மேற்கு மாவட்டம்

## தொப்பம்பட்டி மேற்கு, தொப்பம்பட்டி மத்திய, தொப்பம்பட்டி வடக்கு - ஒட்டன்சத்திரம் வடக்கு, ஒட்டன்சத்திரம் மேற்கு, ஒட்டன்சத்திரம் மத்திய - ஆகிய ஒன்றியங்களில் அடங்கியுள்ள ஊராட்சிகள் மற்றும் ஒன்றியக் கழகப் பொறுப்பாளர்கள் நியமனம்!

### தலைமைக் கழக அறிவிப்பு!

கழக நிர்வாக வசதிக்காகவும் - கழகப் பணிகள் செவ்வனே நடைபெற்றிடவும் திண்டுக்கல் மேற்கு மாவட்டம், தொப்பம்பட்டி கிழக்கு, தொப்பம்பட்டி மேற்கு - ஒட்டன்சத்திரம் வடக்கு, ஒட்டன்சத்திரம் தெற்கு - ஆகிய நான்கு ஒன்றியங்கள், **தொப்பம்பட்டி மேற்கு, தொப்பம்பட்டி மத்திய, தொப்பம்பட்டி வடக்கு – ஒட்டன்சத்திரம் வடக்கு, ஒட்டன்சத்திரம் மேற்கு, ஒட்டன்சத்திரம் மத்திய** ஆகிய 6 ஒன்றியக் கழகங்களாக மாற்றியமைக்கப்பட்டு பிரிக்கப்படுகிறது.

அவ்வாறு மாற்றியமைக்கப்பட்டு, பிரிக்கப்பட்ட **தொப்பம்பட்டி மேற்கு, தொப்பம்பட்டி மத்திய, தொப்பம்பட்டி வடக்கு – ஒட்டன்சத்திரம் வடக்கு, ஒட்டன்சத்திரம் மேற்கு, ஒட்டன்சத்திரம் மத்திய** ஆகிய ஒன்றியங்கள் பின்வரும் ஊராட்சிகள் மற்றும் பேரூர்கள் கொண்டதாக அமையும்.

**தொப்பம்பட்டி மேற்கு ஒன்றியம் (ஒட்டன்சத்திரம் சட்டமன்றத் தொகுதி):**
ஊராட்சிகள் - 1.இராஜாம்பட்டி, 2.கோட்டத்துறை, 3.மேல்கரைப்பட்டி, 4.முத்துநாயக்கன்பட்டி, 5.மிடாப்பாடி, 6.புஷ்பத்தூர், 7.கொழுமங்கொண்டான், 8.கோவிலம்மாபட்டி, 9.தாளையூத்து, 10.மானூர், 11.அக்கரைப்பட்டி, 12.கோரிக்கடவு ஆகிய 12 ஊராட்சிகள்.

**தொப்பம்பட்டி மத்திய ஒன்றியம் (ஒட்டன்சத்திரம் சட்டமன்றத் தொகுதி):**
ஊராட்சிகள் - 1.தொப்பம்பட்டி, 2.தும்பலப்பட்டி, 3.வில்வாதம்பட்டி, 4.புளியம்பட்டி, 5.மொல்லம்பட்டி, 6.மரிச்சிலம்பு, 7.16-புதூர், 8.தேவத்தூர், 9.கொத்தயம், 10.போடுவார்பட்டி, 11.மஞ்சநாயக்கன்பட்டி ஆகிய 11 ஊராட்சிகள் மற்றும் கீரனூர் பேரூர்.

**தொப்பம்பட்டி வடக்கு ஒன்றியம் (ஒட்டன்சத்திரம் சட்டமன்றத் தொகுதி):**
ஊராட்சிகள் - 1.வேலம்பட்டி, 2.வாகரை, 3.மேட்டுப்பட்டி, 4.புங்கமுத்தூர், 5.அப்பனூத்து, 6.வடபருத்தியூர், 7.பாலப்பன்பட்டி, 8.அப்பிபாளையம், 9.பொருளூர், 10.சிக்கமநாயக்கன்பட்டி, 11.கள்ளிமந்தையம், 12.கரியாம்பட்டி, 13.பூசாரிபட்டி, 14. அப்பியம்பட்டி, 15.கூத்தம்பூண்டி ஆகிய 15 ஊராட்சிகள்.

**ஒட்டன்சத்திரம் வடக்கு ஒன்றியம் (ஒட்டன்சத்திரம் சட்டமன்றத் தொகுதி):**
ஊராட்சிகள் - 1.கொ.கீரனூர், 2.மண்டவாடி, 3.சிந்தலப்பட்டி, 4.ஓடைப்பட்டி, 5.குத்திலிப்பை, 6.ஐ.வாடிப்பட்டி, 7.சின்னக்காம்பட்டி, 8.எல்லப்பட்டி, 9.மார்க்கம்பட்டி, 10.இடையகோட்டை, 11.வலையபட்டி, 12.ஜவ்வாதுபட்டி, 13.ஜோகிபட்டி, 14.வெரியப்பூர் ஆகிய 14 ஊராட்சிகள்

**ஒட்டன்சத்திரம் மேற்கு ஒன்றியம் (ஒட்டன்சத்திரம் சட்டமன்றத் தொகுதி):**
ஊராட்சிகள் - 1.சிந்தலவாடம்பட்டி, 2.தா.புதுக்கோட்டை, 3.வேலூர்அன்னப்பட்டி, 4.சத்திரப்பட்டி, 5.வீரலப்பட்டி, 6.விருப்பாட்சி, 7.ரெட்டியபட்டி, 8.பெரியகோட்டை, 9.அமரப்பூண்டி, 10.மேலக்கோட்டை, 11.எரமநாயக்கன்பட்டி, 12.கணக்கன்பட்டி ஆகிய 12 ஊராட்சிகள்.

**ஒட்டன்சத்திரம் மத்திய ஒன்றியம் (ஒட்டன்சத்திரம் சட்டமன்றத் தொகுதி):**
ஊராட்சிகள் - 1.அம்பிளிக்கை, 2.காப்பிலியபட்டி, 3.காவேரியம்மாபட்டி, 4. அரசப்பிள்ளைபட்டி, 5.கொல்லபட்டி, 6.தங்கச்சியம்மாபட்டி, 7.வடகாடு, 8.அத்திக்கோம்பை, 9.லெக்கையன்கோட்டை, 10.காளாஞ்சிபட்டி, 11.கேதையறம்பு, 12.புலியூர்நத்தம், 13.புளியமரத்துக்கோட்டை ஆகிய 13 ஊராட்சிகள்.

**ஒன்றியக் கழகப் பொறுப்பாளர்கள் நியமனம்**

மேற்கண்டவாறு அமைந்த **தொப்பம்பட்டி மேற்கு, தொப்பம்பட்டி மத்திய, தொப்பம்பட்டி வடக்கு – ஒட்டன்சத்திரம் வடக்கு, ஒட்டன்சத்திரம் மேற்கு, ஒட்டன்சத்திரம் மத்திய** ஆகிய ஒன்றியக் கழகப் பணிகள் செவ்வனே நடைபெற, ஒன்றியக் கழகப் பொறுப்பாளர்கள் பின்வருமாறு நியமிக்கப்படுகிறார்கள்.

**தொப்பம்பட்டி மேற்கு ஒன்றியம்**

**பொறுப்பாளர் : நா.சுப்பிரமணியன்,** குளத்துத் தோட்டம், கொழுமங்கொண்டான், பழனி வட்டம், திண்டுக்கல் மாவட்டம்.

**தொப்பம்பட்டி மத்திய ஒன்றியம்**

**பொறுப்பாளர் : கா. பொன்ராஜ்,** புளியம்பட்டி & அஞ்சல் பழனி வட்டம், திண்டுக்கல் மாவட்டம்.

**தொப்பம்பட்டி வடக்கு ஒன்றியம்**

**பொறுப்பாளர் : கா. தங்கராஜ்,** கே. மார்க்கண்டாபுரம், கூத்தம்பூண்டி அஞ்சல் ஒட்டன்சத்திரம் வட்டம், திண்டுக்கல் மாவட்டம்.

**ஒட்டன்சத்திரம் வடக்கு ஒன்றியம்**

**பொறுப்பாளர் : இரா. ஜோதீஸ்வரன்,** இ.வாடிப்பட்டி & அஞ்சல் ஒட்டன்சத்திரம் வட்டம், திண்டுக்கல் மாவட்டம்.

**ஒட்டன்சத்திரம் மேற்கு ஒன்றியம்**

**பொறுப்பாளர் : தி. தர்மராஜன்,** சத்திரப்பட்டி & அஞ்சல் ஒட்டன்சத்திரம் வட்டம், திண்டுக்கல் மாவட்டம்.

**ஒட்டன்சத்திரம் மத்திய ஒன்றியம்**

**பொறுப்பாளர் : எஸ்.ஆர்.கே. பாலு,** தும்மிச்சம்பட்டி ஒட்டன்சத்திரம் நகரம், ஒட்டன்சத்திரம் வட்டம், திண்டுக்கல் மாவட்டம்.

**"அண்ணா அறிவாலயம்"**
சென்னை - 18
நாள்- 17.12.2024

**துரைமுருகன்**
பொதுச் செயலாளர்,
தி.மு.க.

## திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

### சங்ககிரி சி.வீரமணி

### டிசம்பர் 19 (2004)



மாணவப் பருவத்திலிருந்து பேரறிஞர் அண்ணா, தலைவர் கலைஞர் ஆகியோர் மீது ஈடுபாடு கொண்டு கழகப் பணியாற்றியவர்.

கோவை வேளாண் பல்கலைக் கழகத்தில் தேர்வுக்குழு உறுப்பினர், சேலத்தில் பல்வேறு கூட்டுறவுச் சங்கங்களில் இயக்குநர், பூமி தான வாரியத்தில் உறுப்பினர், தோல் பதனிடும் தொழிலாளர் நல வாரிய உறுப்பினர் என பல்வேறு பொறுப்புகளை வகித்தவர்.

1968ஆம் ஆண்டு சங்ககிரி இடைத்தேர்தலில் போட்டியிட்டு, சட்டமன்ற உறுப்பினராக வெற்றி பெற்று, சிறப்பாக மக்கள் நலப் பணியாற்றி அவர்களின் நன்மதிப்பைப் பெற்றவர்.

கழகம் நடத்திய பல்வேறு அறப்போராட்டங்களில் கலந்து கொண்டு சிறை சென்றவர்.

**தலைமைக் கழகம்**
**தி.மு.க.**